வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு

# தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை
# 2015



தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை
# 2015

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
த.பெ.14, பேராதனை.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 03 |
| 2. | 2015ம் ஆண்டின் முன்னேற்றம் | 09 |
| 3. | வருமானம் | 11 |
| 4. | நிதிச் செலவு முன்னேற்றம் | 12 |
| 5. | 2015ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் | 17 |
| 6. | திணைக்களத்தின் கீழான ஏனைய அலகுகளின் முகாமை | 27 |
| 7. | 2015ம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளக இட மற்றம், சம்பள உயர்வு, ஏனைய விடயங்கள் | 29 |
| 8. | பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 30 |
| 9. | 2016ம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள் | 31 |

# 1. அறிமுகம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது, தாவரவியல் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் முன்னோடி நிறுவனமாகும். தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரங்கள் குறித்த கல்விச் செயற்பாடுகள், இலங்கையில் அலங்காரப் பூங்காவியலை ஊக்குவிப்பதற்கான ஆய்வு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள், பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் திகழ்கிறது.

பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கபபட்ட பிரதான பூங்காக்களான பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) மற்றும் 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா ஆகியவற்றோடு முறையே 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் 2015ம் ஆண்டு அவிசாவலை சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியன மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாவரவியல் பூங்காக்களில் 4500 க்கும் மேற்பட்ட தாவரவகைகள் பேணப்படுவதோடு அரிய வகைத் தாவரங்கள், காடுகளிலிருந்து அழிந்து போயுள்ள தாவரங்கள் இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா இலங்கையின் மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்புக்கும் பரவுகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

இத்திணைக்களத்தின் தேசிய தாவரக்கயம் தாவர சான்றுப்படுத்தல் பணிகளையும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் தாவரவியல் விஞ்ஞானத்தின் ஏனைய பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கைக்கான வர்த்தக வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பணியை பல்வேறு ஊடகங்கள், பணிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கிறது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, குறுங்கால கற்கை நெறிகள், 1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகள் ஆகியனவற்றை வழங்குகின்றது.

தாவரவியல் பூங்காக்களானவை, ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட அதன் தாவரங்கள் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றது

## 1.2 . நோக்கு

தாவரவியல் மற்றும் அழகியல் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிக்கொண்டு அயன வலயத்தின் மிகச் சிறந்த தாவரவியல் பூங்காவாக மாறுதல்.

## 1.3. பணி

இயற்கையான மற்றும் செயற்கையான சூழல்களில் காணப்படும் தாவர வளங்கள் பற்றி ஆய்வு செய்தல், அவற்றின் நிலையான பேணுகை மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளினூடு தாவர வளங்களை பொது மக்களுக்கு சமீபமாக்குதல்.

## 1.4 திணைக்களத்தின் பிரதான பணிகள்

1. இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்
2. கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
4. இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்துப் பேணல்.
5. பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் செயல்படுத்தலும்
6. அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
7. இலங்கையின் அடையாளம் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைககளை வழங்குதல்.
8. அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

## 1.5 பணியாளர்கள் பற்றிய விபரம்

திணைக்களத்துக்கான அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 749 ஆகும். 2015.12.31 ம் திகதிக்கு 648 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர். அது பற்றிய சாராம்சம் வருமாறு:

### 1.5.1 2015.12.31ம் திகதிக்கு திணைக்களத்தின் பணியாளர் பற்றிய விபரம்

| சேவை வகை | சம்பள முறைமை | சேவை / பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | SL – 3<br>SL- 1 | இ.வி.சே.<br>இ.நி.சே.<br>இ.கண.சே.<br>இ.பொறி.சே.<br>இ.க.க.சே. | 33 | 15 |
| மூன்றாம் நிலை | MN – 7<br>MN – 6 | நிர்வாக அலுவலர்<br>இ.தொ.நு.சே./ விஷேச தரம்<br>மொழிபெயர்ப்பாளர் | 09 | 05 |
| இரண்டாம் நிலை | MN – 4<br><br>MN – 3<br>MN – 1<br>MT – 1 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்/<br>அபிவிருத்தி அலுவலர்<br>விவசாய நடவடிக்கை அலுவலர்<br>விவசாய ஆலோசகர்<br>பூங்கா அபிவிருத்தி உதவியாளர்<br>ஆய்வு உதவியாளர்<br>தொழில்நுட்ப அலுவலர்<br>(விவசாய நடவடிக்கை அலுவலர் முதல் தொழில்நுட்ப அலுவலர் வரை: இலங்கை தொழில் நுட்ப சேவை)<br>அரச முகாமைத்துவ சேவை<br>கட்டண அறவீட்டு உதவியாளர்<br>செவிப்புல, கட்புல உதவியாளர்<br>தகவல் தொழில் நுட்ப உதவியாளர்<br>பூங்கா வேலை மேற்பார்வையாளர் | 186 | 113 |
| ஆரம்ப நிலை | PL – 1<br>PL – 2<br>PL – 3 | தேர்ச்சி அற்ற<br>பகுதி தேர்ச்சி பெற்ற<br>தேர்ச்சி பெற்ற | 521 | 515 |
| **மொத்தம்** | | | **749** | **648** |


### 1.5.2. திணைக்களத்தின் சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | கலாநிதி. டீ. எச். பீ. பெரமுனுகம |
| பணிப்பாளர் (அபிவிருத்தி) | திரு. கே.என். யாபா |
| பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப மாற்றீடு) | கலாநிதி. எஸ். ஏ. கிருஷ்ணராஜா |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | திருமதி. ஐ. டபிள்யு. எம் .சீ .கே .இலங்ககோன் |
| பிரதம கணக்காளர் | திரு. டபிள்யு. டீ. யூ. டீ மெல் |
| சிவில் பொறியியலாளர் | திரு. ஏ. எல். எம். மாஹிர் |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி) | திருமதி. எம். சீ. லியனகே |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | திரு. வை. எம். வை. யாபா பண்டார |
| நிர்வாக அலுவலர் | திரு.என். டபிள்யு. யூ. ஆர். ஜயலத் |

### 1.5.3. திணைக்களத்தின் ஏனைய சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (அரச தாவரவியல் பூங்கா) | கலாநிதி. ஏ. எம். ஏ.எஸ். அத்தநாயக |
| பிரதிப் பணிப்பாளர் (பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி) | திருமதி. எச். சீ. பீ. ஜயவீர |
| உதவிப் பணிப்பாளர் ( கம்பஹா தாவரவியல் பூங்கா) | திரு. எம். எச். டீ. ஜே. சேனாரத்ன |
| உதவிப் பணிப்பாளர் ( நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகம்) | திருமதி. ஆர். எஸ். டபிள்யு. கோமஸ் |
| ஆய்வு அலுவலர் / பிரதிப் பணிப்பாளர் (தேசிய தாவரக்கயம்) | திருமதி. ஆர். ஏ. எஸ். டபிள்யு. ரணசிங்ஹ |
| உதவிப் பணிப்பாளர் ( சீதாவக ஈரவலய தாவரவியல் பூங்கா) | திரு. பீ. டீ. எஸ். விஜேரத்ன |

## 1.6 நிறுவனக் கட்டமைப்பு



## 1.7 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

### அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, கல்வி, தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது.

### தேசிய தாவரக்கயம் - பேராதனை

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலாந்த தாவரக்கய மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 160,000 க்கும் அதிகமான தாவரக்கய மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

### ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா – கம்பஹா

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பா பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 43 ஏக்கா பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இது இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000த்துக்கும் அதிகமான தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

### பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும். பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களையும் வழங்குவதிலும் பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

### மூலிகைப் பூங்கா – கனேவத்த

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 52 ஏக்கர்கள் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

**உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை**

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும்.இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

**இலுக்வவிட்ட, ஈரவலய தாவரவியல் பூங்கா (அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன)**

அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இதன் அபிவிருத்திப் பணிகள் 2008ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015 ம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. இது 105 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான குறிக்கோளாகும்.

**சுவஹஸ் மல் செவன, கொழும்பு.**

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் ‘சுவஹஸ்மல்’ சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்தும், இத்திணைக்களத்தின் முக்கிய அலகாகத் தொழிற்படுகிறது.

**அதி** மேதகு **ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்**

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

**பொதுநலவாய போர் சமாதிகள்**

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை இத்திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

**பசுமை இல்லம், மீகல்லாவ**

மீகல்லாவ பசுமை இல்லமானது வடமேல் மாகாணத்தில், குருனாகலையிலிருந்து 60 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. தற்போது இது 06 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இது பூச்செடியியல் துறையில் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி நிலையமாகவும் தாவர உற்பத்தி நிலையமாகவும் செயற்படவுள்ளது.

**ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல**

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய தாவரவியல் பூங்காவாகும். இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். அங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலைத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

## 2. 2015 ஆம் ஆண்டின் அடைவுகள்


### 2.1 பார்வையாளர் வருகை

2015ம் ஆண்டில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் அனைத்து அலகுகளும் உயர் தரத்தில் பேணப்பட்டன.

இவ்வருடத்தில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை 2,623,255 ஆகும். இவர்களுள் 2,215,702 பேர் உள்நாட்டவர்களும் 407,553 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்.

கடந்த வருடத்துடன் (2014) ஒப்பிடுகையில் உள்நாட்டுப பார்வையாளர்களின் வருகை 18% வீதத்தாலும் வெளிநாட்டுப் பார்வையாளர் வருகை 17% வீதத்தாலும் அதிகரித்துள்ளது.


### 2.2. 2015ம் ஆண்டில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்களின் எண்ணிக்கை




### 2.2. 2011 ம் ஆண்டு முதல் 2015 ம் ஆண்டு வரை தாவரவியல் பூங்காக்களுக்கான பார்வையாளர் வருகை

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| உள்நாட்டுப் பார்வையாளர்கள் | 1,862,222 | 1,931,914 | 1,783,069 | 1,893,522 | 2,215,702 |
| வெளிநாட்டுப் பார்வையாளர்கள் | 236,763 | 259,545 | 293,454 | 345,468 | 407,553 |
| மொத்தம் | **2,098,985** | **2,191,459** | **2,076,523** | **2,238,990** | **2,623,255** |

2.3. 2015ம் ஆண்டில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கை




2.4. 2015ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களுக்கு வருகை தந்த பார்வையாளர் விபரம்

| பார்வையாளர் எண்ணிக்கை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மிரிஜ்ஜவில | சீதாவக | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| உள்நாடு - வளர்ந்தோர் | 859,664 | 537,803 | 183,520 | 25,459 | 51,331 | 1,657,777 |
| உள்நாடு - சிறுவர்கள் | 299,705 | 196,624 | 17,149 | 13,727 | 8,024 | 535,229 |
| சிரேஷ்ட பிரஜைகள் | 9,559 | 7,706 | 1,077 | 1,865 | 2,489 | 22,696 |
| உள்நாட்டுப் பார்வையாளர் மொத்தம் | 1,168,928 | 742,133 | 201,746 | 41,051 | 61,844 | 2,215,702 |
| வெளிநாடு - வளர்ந்தோர் | 358,071 | 21,825 | 314 | 42 | 33 | 380,285 |
| வெளிநாடு - சிறுவர்கள் | 18,544 | 2,015 | 12 | 1 | 3 | 20,575 |
| வெளிநாடு - மாணவர்கள் | 6,316 | 348 | 18 | 4 | 7 | 6,693 |
| வெளிநாட்டுப் பார்வையாளர் மொத்தம் | 382,931 | 24,188 | 344 | 47 | 43 | 407,553 |
| மொத்தப் பார்வையாளர்கள் | 1,551,859 | 766,321 | 202,090 | 41,098 | 61,887 | 2,623,255 |


## 3. வருமானம்

2015ம் ஆண்டில் நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை என்பன மூலம் திணைக்களம் பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் 568.4 மில்லியன் ரூபாய்களாகும். (பார்வையாளர்கள் மூலம் 523.6 மில்லியன் ரூபாய்களும் தாவர விற்பனை மற்றும் ஏனைய வருமானங்கள் மூலம் 44.8 மில்லியன் ரூபாய்களும் வருமானமாகப பெறப்பட்டன.) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 18 % அதிகரிப்பாகும்.

### 3.1. 2011ம் ஆண்டு முதல் 2015 வரை பார்வையாளர்கள் மூலம் திணைக்களத்துக்குக் கிடைத்த மொத்த வருமானம்.

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| உள்நாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.) | 75.1 | 77.6 | 73 | 75.9 | 88.5 |
| வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.) | 253.9 | 279 | 314.9 | 369.8 | 435.1 |
| மொத்தம் (ரூ. மில்.) | **329.0** | **356.6** | **387.9** | **445.7** | **523.6** |

### 3.2. 2015ம் ஆண்டில் தினக்க்களத்தின் அலகுகள் மூலம் கிடைத்த வருமானம் (%)



### 3.3. திணைக்களத்தின் மொத்த வருமானம் அலகு ரீதியாக

| அலகு | மொத்த வருமானம் (ரூ.) |
|---|---|
| அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 479,036,738.72 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | 59,194,023.30 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | 19,174,752.50 |
| கனேவத்த மூலிகைப் பூங்கா | 1,530,132.50 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில | 3,261,651.06 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 5,966,821.00 |
| "சுவஹஸ் மல் செவன" நாற்று மேடை, பத்தரமுல்ல | 241,345.00 |
| **மொத்தம்** | **568,405,464.08** |

## 4. நிதி முன்னேற்றம்

பிரதான பூங்காக்களினதும் அலகுகளிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டதோடு 2015ம் ஆண்டாகும் போது நிதி முன்னேற்றம் 97 % ஆகும்.

### 4.1 2015ம் ஆண்டின் செலவு விபரம்

| விபரம் | தேறிய ஒதுக்கீடு (ரூபா மில்) | மொத்தச் செலவு (ரூபா மில்) | செலவு வீதம் |
|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | 369.3 | 349.2 | 95% |
| **மீண்டெழும் செலவு** | 337.211 | 334.8 | 99% |

### 4.2. மீண்டெழும் செலவு

| விடயக் குறியீடு | விடய விபரம் | ஒதுக்கீடு 2015 (ரூ. 000') | மொத்தச் செலவு 2015 (ரூ. 000') | நிகர செலவு | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ. 000') | % |
|---|---|---|---|---|---|---|
| | **ஆட்களுக்கான கொடுப்பனவுகள்** | **280,301,000.00** | **277,185,027.16** | **276,810.084** | **3,490.916** | **99%** |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 115,337,000.00 | 114,537,071.73 | 114,214.054 | 1,122.946 | 99% |
| 1002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 5,000,000.00 | 4,150,794.66 | 4,150.251 | 849.749 | 83% |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 159,964,000.00 | 158,497,160.77 | 158,445.779 | 1,518.221 | 99% |
| | **பிரயாணச் செலவுகள்** | **1,850,000.00** | **1,768,474.44** | **1,767.090** | **82.910** | **95%** |

| விடயக் குறியீடு | விடய விபரம் | ஒதுக்கீடு 2015 (ரூ. 000') | மொத்தச் செலவு 2015 (ரூ. 000') | நிகர செலவு | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ. 000') | % |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1101 | உள்நாடு | 1,500,000.00 | 1,419,494.19 | 1,418.110 | 81.890 | 94% |
| 1102 | வெளிநாடு | 350,000.00 | 348,980.25 | 348.980 | 1.020 | 100% |
| | **வழங்கல்கள்** | **7,860,000.00** | **7,893,835.69** | **7,841.186** | **18.814** | **100%** |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 700,000.00 | 699,385.06 | 699.385 | 0.615 | 100% |
| 1202 | எரிபொருள் | 3,210,000.00 | 3,245,955.70 | 3,193.306 | 16.694 | 100% |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 250,000.00 | 249,146.20 | 249.146 | 0.854 | 100% |
| 1205 | வேறு | 3,700,000.00 | 3,699,348.73 | 3,699.349 | 0.651 | 100% |
| | **நடத்துகைச் செலவுகள்** | **3,250,000.00** | **3,064,578.26** | **3,045.616** | **204.384** | **94%** |
| 1301 | வாகனங்கள் | 2,000,000.00 | 1,845,074.24 | 1,826.112 | 173.888 | 91% |
| 1302 | செடிகள்,பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 600,000.00 | 570,996.48 | 570.996 | 29.003 | 95% |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 650,000.00 | 648,507.54 | 648.507 | 1.492 | 100% |
| | **சேவைகள்** | **42,550,000.00** | **43,449,784.84** | **41,925.191** | **624.809** | **99%** |
| 1401 | போக்குவரத்து | 900,000.00 | 694,087.00 | 694.087 | 205.913 | 77% |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,600,000.00 | 1,581,358.39 | 1,564.037 | 35.963 | 98% |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 5,400,000.00 | 6,536,351.52 | 5,029.479 | 370.521 | 93% |
| 1404 | வாடகைகளும் உள்நாட்டு வரிகளும் | 700,000.00 | 699,949.05 | 699.949 | 0.051 | 100% |

| விடயக் குறியீடு | விடய விபரம் | ஒதுக்கீடு 2015 (ரூ. 000') | மொத்தச் செலவு 2015 (ரூ. 000') | நிகர செலவு | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ. 000') | % |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1405 | ஏனைய சேவைகள் | 33,950,000.00 | 33,938,038.88 | 33,937.639 | 12,361.12 | 100% |
| | **மாற்றுகைகள்** | **1,400,000.00** | **1,400,000.00** | 1,400.000 | **0.00** | **100%** |
| 1506 | ஆதனக் கடன் வட்டி | 1,400,000.00 | 1,400,000.00 | 1,400.000 | 0.00 | 100% |
| மொத்தம் | | **337,211,000.00** | **334,761,700.39** | **334,761,700.39** | **4,421,833.06** | **99%** |

## 4.3. மூலதனச் செலவுகள்

| உப செயற் திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | ஒதுக்கீடு 2015 (ரூ. 000') | மொத்தச் செலவு 2015 (ரூ. 000') | நிகர செலவு | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.000') | % |
|---|---|---|---|---|---|---|---|
| | | **கட்டிடங்களை புனர் நிர்மாணம் செய்தல்** | **4,350,000.00** | **4,091,327.19** | **4,091,327.19** | **258,672.81** | **94.1%** |
| 0 | 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 3,000,000.00 | 2,895,710.53 | 2,895,710.53 | 104,289.47 | 96.5% |
| 0 | 2002 | செடிகள்,பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 550,000.00 | 493,635.66 | 493,635.66 | 56,364.34 | 89.8% |
| 0 | 20 | வாகனங்கள் | 800,000.00 | 701,981.00 | 701,981.00 | 98,019.00 | 87.7% |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்** | **8,650,000.00** | **7,753,138.25** | **7,753,138.25** | **896,861.75** | **89.6%** |
| 0 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 600,000.00 | 580,409.75 | 580,409.75 | 19,590.25 | 96.7% |
| 0 | 2103 | செடிகள்,பொறித் தொகுதி, இயந்திரங்கள், | 550,000.00 | 541,582.75 | 541,582.75 | 8,417.25 | 98.5% |
| 0 | 2104 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 5,000,000.00 | 4,145,539.24 | 4,145,539.24 | 854,460.76 | 82.9% |
| 0 | 2105 | காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | 2,500,000.00 | 2,485,606.51 | 2,485,606.51 | 14,393.49 | 99.4% |

| உப செயற்திட்டம் | விடயக்குறியீடு | விடய விபரம் | ஒதுக்கீடு 2015 (ரூ. 000') | மொத்தச் செலவு 2015 (ரூ. 000') | நிகர செலவு | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.000') | % |
|---|---|---|---|---|---|---|---|
| | | **மூலதன மாற்றுகைகள்** | | | | | |
| 0 | 2201 | தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | 100,000,000.00 | 100,000,000.00 | 100,000,000.00 | 0.00 | 100.0 % |
| 0 | 2401 | பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 300,000.00 | 237,260.00 | 237,260.00 | 62,740.00 | 79.1% |
| | | **விஷேட செயற் திட்டங்கள்** | | | | | |
| 1 | 2105 | கனேவத்த மூலிகைப் பூங்கா<br>கம்பஹா தாவரவியல் பூங்கா | 35,000,000.00 | 34,907,638.53 | 34,907,638.53 | 92,361.47 | 99.7% |
| 2 | 2105 | பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 30,000,000.00 | 33,183,755.55 | 29,954,076.29 | 45,923.71 | 99.8% |
| 3 | 2105 | உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை | 130,000,000.00 | 117,750,585.29 | 117,750,585.29 | 12,249,414.71 | 90.6% |
| 4 | 2105 | ஈர வலயத் தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 40,000,000.00 | 36,716,776.88 | 36,670,172.63 | 3,329,827.37 | 91.7% |
| 6 | 2105 | பூச்செடிச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 5,000,000.00 | 5,015,170.70 | 4,898,575.70 | 101,424.30 | 98.0% |
| 7 | 2105 | மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலையம் | 7,000,000.00 | 6,999,425.17 | 6,984,910.39 | 15,089.61 | 99.8% |
| 8 | 2105 | தாவரவியல் கணக்கெடுப்பு | 1,000,000.00 | 1,005,811.79 | 997,311.79 | 2,688.21 | 99.7% |
| 9 | 2105 | வடக்கில் புதிய தாவரவியல் பூங்காவொன்றை அமைத்தல் | 3,000,000.00 | 0.00 | 0.00 | 3,000,000.00 | 0.0% |
| 10 | 2105 | பூச்செடியியல் மற்றும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி நடவடிக்கைகள் | 5,000,000.00 | 5,003,316.33 | 4,977,431.96 | 22,568.04 | 99.5% |
| **மொத்தம்** | | | **369,300,000.00** | **352,664,205.68** | **349,222,428.02** | **20,077,571.98** | **94.6%** |

### 4.3. திணைக்களத்துக்கு 2015ம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளும் செலவுகளும்

| நிகழ்ச்சித் திட்டம் | 2015ம் ஆண்டுக்கான அரசின் மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | 2015ம் ஆண்டுக்கான அரசின் மொத்த ஒதுக்கீட்டுச் செலவு (ரூ.மில்) | 2015ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு (ரூ.மில்) | 2015ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதிய ஒதுக்கீட்டுச் செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| பேராதனை, அரச தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 7.5 | 7.04 | 32.25 | 26.15 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 23.415 | 22.94 | 5.5 | 5.11 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 2.85 | 2.95 | 8.83 | 6.76 |
| கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தி | 12.5 | 12.34 | 0.00 | 0.00 |
| மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலைய அபிவிருத்தி | 7 | 6.99 | 0.00 | 0.00 |
| கல்வி மற்றும் பயிற்சி | 0.3 | 0.24 | 1.1 | 1.04 |
| தாவரக்கயம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆய்வு | 1.03 | 1 | 0.35 | 0.33 |
| தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி மற்றும் கண்காட்சிகள் | 40 | 39.83 | 0.00 | 0.00 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 40 | 36.67 | 16 | 15.66 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை | 130 | 117.75 | 0.00 | 0.00 |
| வட மாகாணத்தில் புதிய தாவரவியல் பூங்காவொன்றை அமைத்தல் | 3 | 0.00 | 0.00 | 0.00 |
| பிரதான பணிமனை அபிவிருத்தி நடவடிக்கைகள் | 1.705 | 1.5 | 35.97 | 33.59 |
| **மொத்தம்** | **269.3** | **249.2** | **100** | **88.64** |

## 5. 2015 ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

### 5.1 மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ.மில். 130<br>செலவு : ரூ.மில். 117.7 |



பூங்காவின் அழகிய தோற்றம்

தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் புதிய கழிவறைத் தொகுதிகள் 02 நிர்மாணிக்கும் பணிகள் நடைபெறுவதோடு, அவற்றின் நிர்மாணப்பணிகள் 90% நிறைவு பெற்றுள்ளன. உள்ளக வீதிகள் இண்டர்லொக் கற்கள் மேம்படுத்தப்படுவதோடு இவ்வருடம் திட்டமிடப்பட்ட பணிகளில் 60% நிறைவு பெற்றுள்ளன. மேலும் பார்வையாளர்களுக்காக குடி நீர்க் குழாய்கள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு மத்தியில் குறிப்பாக உலர் வலயத் தாவரங்கள் பற்றிய அறிவை விருத்தி செய்யவும் அவற்றைப் பொதுமக்களுக்கு சமீபமாக்கவும் பேணிப்பாதுகாக்கவுமென தாவர இல்லமொன்றை நிர்மாணிக்கும் பணியும் திறந்த வெளி கள்ளித் தாவரப் பேணகமொன்றை நிர்மாணிக்கும் பணியும் நடைபெறுவதோடு அப்பணிகளில் 60% நிறைவு பெற்றுள்ளன.



பூங்காவின் முற்பகுதியில் புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடமொன்றும் வேலியும் அமைக்கப்படல்

நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு பூங்காவுக்கு வரும் பார்வையாளர்களின் வசதி கருதியும் அனுமதியின்றி பூங்காவுக்குள் நுழையும் நபர்களைகே கட்டுப்படுத்தும் நோக்கிலும் பூங்காவின் முற்பகுதியில் புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடமொன்றும் வேலியும் அமைக்கப்பட்டன.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வசதி கருதி பாதுகாப்பு அலுவலகமொன்று நிர்மாணிக்கப்பட்டதோடு, பாதுகாப்புக் கூடங்கள் 04 ம் அமைக்கப்பட்டன.

தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களது வேலைத்தளங்களை ஒன்றிணைத்து அதற்காக பணியாளர் வசதிகள் கட்டிடமொன்று சகல வசதிகளுடனும் அமைக்கப்படுவதோடு நிர்மாணப்பணிகள் 50 % நிறைவு பெற்றுள்ளன.

தற்போதுள்ள பணியாளர் உத்தியோகபூர்வ இல்லங்கள் 02க்கு மேலதிகமாக புதிதாக 02 இல்லங்களை அமைக்கும் பணியும் பூங்காவில் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வுகூடம் ஒன்றை அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டு 30%ப்பணிகள் நிறைவடைந்துள்ளன.



திறந்த வெளி கள்ளித் தாவரப் பேணகத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

மேலும் கடந்த வருடம் (2014) ஆரம்பிக்கப்பட்ட பூங்காவைச் சுற்றி மின்சார வேலி அமைக்கும் பணி இவ்வருடம் நிறைவுற்றது.

பூங்காவின் பூமி அலங்காரத்தை மேம்படுத்தும் பொருட்டு அழகுமிகு தாவரங்களுடனான பூந்தோட்டங்கள், அடிப்பாதைகள், பாதைகள் என்பன அமைக்கப்பட்டதோடு புதர்ப் பூங்காவும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

பூங்காவை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.



பணியாளர் வசதிகள் கட்டிட நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கு வசதியளிக்கும் வகையில் பூங்காவின் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பூங்காவின் தாவரச்சேகரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, பூச்செடியியல் விரிவாக்க அலுவலகத்தின் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போரை ஊக்குவிக்கும் வகையில் நிழல் வலைகள் உள்ளிட்ட பூ வளர்ப்புச் சாதனங்கள் அவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு, பயிற்சிச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.

## 5.2 . சீதாவக ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ.மில். 40, தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். 16<br>செலவு : ரூ.மில். 52.3 |


பூங்கா திறந்து வைக்கப்படல்

இப்பூங்கா 2015 மார்ச் மாதம் 25ம் திகதி விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை கௌரவ அமைச்சர் நவீன் திசாநாயக அவர்களால் பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கபப்ட்டது. பூங்கா பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்ட பின்னர் பார்வையாளர்களுக்கான வசதிகளை வழங்கவும் உயர் நடத்துகைக்காவும் புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

அவ்வகையில் வனப்பூங்காவின் அழகிய சுற்றுச்சூழலின் ஊடு பூங்காவின் உயர் பகுதிக்கு செல்லும் பாதையில் பார்வையிடும் தளமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 80% மான வேலைகள் நிறைவடைந்துள்ளன.

பார்வையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் புதிய கழிவறைத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டது. மேலும் பூங்காவின் மத்தியிலுள்ள குளத்தில் தோணிச்சவாரி செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பூங்காவின் அனைத்துக் கட்டிடங்களுக்கும் வர்ணம் பூசப்பட்டன. கள அலுவலகம் மற்றும் களஞ்சியசாலைக்கான தேவை வடிவமைக்கப்பட்ட 03 கொள்கலன்கள் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளப்பட்டன.


02

பார்வையாளர்கள் பூங்காவின் குளத்தில் தோணிச் சவாரி செய்யும் காட்சி

பூங்காவின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ரோசாத் தோட்டத்துக்கு நீர்ப்பாசனப் பொறிமுறையொன்று பொருத்தப்பட்டதோடு, பாதுகாப்பு வேலியும் அமைக்கப்பட்டது

பூங்காவுக்குப் புதிதாக சுவீகரிக்கப்பட்ட பகுதியில் காணப்பட்ட பழைய கட்டிடங்கள் இனை உத்தியோகபூர்வ இல்லங்களாக அபிவிருத்தி செய்தற்கான கேள்விப்பத்திர நடவடிக்கைகள் கட்டிடத் திணைக்களத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோடு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியின் பாதைகளுக்கு இண்டர்லொக் கற்கள் பதிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூங்காவின் நில அலங்காரத்தை மேம்படுத்த ஜப்பானியப் பூங்காவொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 02 வசந்த இல்லங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன. பூங்காவைச் சூழ பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

பூங்காவை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

புல் வெளி மற்றும் தாவரச் சேகரிப்பு சிறந்த முறையில் பேணப்பட்டதோடு, மரச் சேகரிப்பில் ஐந்து ஏக்கர் நிலப் பிரதேசம் சிறந்த வகையில் மேம்படுத்தப்பட்டது.

## 5.3 தாவரக்கயம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆய்வு

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ.மில். 1.03
தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து : ரூ.மில். 0.35

செலவு : ரூ.மில். 1.3



**லைக்கன் பற்றிய மூன்று நாள் செயலமர்வின் ஒரு கட்டம்**

தாவர வகைப்படுத்தல் ஆய்வுத் துறையை உக்குவிக்கும் பொருட்டு இலங்கையின் லைக்கன்கள் பற்றிய மூன்று நாள் செயலமர்வொன்று 2015 மார்ச் 05ம் திகதி முதல் 07ம் திகதி வரை பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. டில்மா பேணுகை நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையுடன் தேசிய தாவரக்கயத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்செயலமர்வை லண்டன் இயற்கை விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி பெட் வொல்செலே, நெதர்லாந்துத் தாவரக்கயத்தைச் சேர்ந்த கலாநிதி ஏ. அப்ட்ரூட், சிகாகோவின் துறைசார் நூதனசாலையைச் சேர்ந்த பேராசிரியர் மார்செலா கெசெரஸ் மற்றும் பேராதனை, சப்ரகமுவ பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர் கலாநிதி கோத்தமி வீரகோன் மற்றும் கலாநிதி ஆனந்த ஜயலால் ஆகியோர் நடாத்தினர்.

உயிரினப் பல்வகைமை, பாதுகாப்பு மற்றும் தாவரக்கயத் தொழில் நுட்பம் மற்றும் முகாமை பற்றிய செயலமர்வுகள் பாடசாலை மாணவர்கள் 100 பேரின் பங்கேற்புடன் உலர் வலய தாவரவியல் பூங்காவில் நடாத்தப்பட்டது. அவ்வாறே கண்டிப் பிரதேசப் பாடசாலை மாணவர்கள் 100 பேர் மற்றும்




**உயிரினப் பல்வகைமை மற்றும் தாவரங்கள் பற்றி பாடசாலை மாணவர்களுக்கான விரிவுரை**

ஆசிரியர்கள் 20 பேரின் பங்கேற்புடனும் குருநகல் பிரதேசப் பாடசாலை மாணவர்கள் 100 பேர் மற்றும் ஆசிரியர்கள் 16 பேரின் பங்கேற்புடனும் மாத்தளைப் பிரதேசப் பாடசாலை மாணவர்கள் 115 பேர் மற்றும் ஆசிரியர்கள் 20 பேரின் பங்கேற்புடனும் மேற்படி செயலமர்வுகள் பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

மேலும் தாவரக்கயத் தொழில் நுட்பம் மற்றும் முகாமை, உயிரினப் பல்வகைமை மற்றும் தாவரங்கள் பற்றிய பல விரிவுரைகள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்கள் 611 பேருக்கு நடாத்தப்பட்டன.

தாவரவியல் விஞ்ஞானப் பெறுமானம் கொண்ட தாவரங்களைக் கண்டாய்வதற்கான ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமாக உலர் மற்றும் ஈர வலய அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தும் தாவர ஆய்வுகள் இவ்வருடமும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் உயர் மலைப் பிரதேசத் தாவரங்கள் குறித்த ஆய்வு நமுனுகுல, பீதுருதலாகல மற்றும் தொடுபொலகந்த ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் கீழ் தாவரக் கண்டாய்தல்கள் 23 மேற்கொள்ளப்பட்டு பூக்கும் தாவர மாதிரிகள் 954 ம் பண்ணத் தாவர மாதிரிகள் 36ம் பாசித் தாவர மாதிரிகள் 73ம் சேகரிக்கப்பட்டன. இத்தாவர மாதிரிகளுள் ஆபத்துக்குட்பட்டுள்ள தாவரங்கள் 34ம் எதிர்காலத்தில் ஆபத்துக்குடக்கூடிய தாவரங்கள் 49ம் ஆபத்துக்குள்ளாக அண்மித்துள்ள தாவரங்கள் 41ம் அடையாளம் காணப்பட்டன. தேவையான சந்தர்ப்பங்களில் வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் தாவரப் பேணுகை மேற்கொள்ளப்பட்டதோடு, சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தேசிய தாவரக்கயத்தில் எதிர்கால ஆய்வுகளுக்காக சேகரித்து வைக்கப்பட்டன.




**“Moss Flora in Central Highlands of Sri Lanka”**
**புத்தகம்**

“Moss Flora in Central Highlands of Sri Lanka” என்ற நூல் இவ்வருடம் பிரசுரிக்கப்பட்டது. “Wild Flowers of Sri Lanka” என்ற நூலை அச்சிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. “Wild Flowers of Sri Lanka” என்ற நூலில் 250 மாதிரிகளது புகைப்படங்களுடனான விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பேணுகை நிலை, வாழிடம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. “Moss Flora in Central Highlands of Sri Lanka” என்ற நூலில் இலங்கையின் மத்திய மலைநாட்டின் மேட்டு நிலங்களது பாசித் தாவரங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. Common Wayside Trees of Sri Lanka” என்ற நூலின் பிரசுர நடவடிக்கைகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டன. அதில் 200 மாதிரிகளது புகைப்படங்களுடனான விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பேணுகை நிலை, வாழிடம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் இரு நூல்களிலும் தகவல்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலும் தரப்பட்டுள்ளன. ஆபத்துக்குட்பட்டுள்ள இலங்கையின் தாழ்நிலத் தாவரங்கள் பற்றியும் ஆக்கிரமிப்புத் தாவரங்கள் பற்றியும் 12 பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

தேசிய தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தாவர விளக்கப்படங்களை கற்கைகளுக்காகக் கையாள்வதனை இலகுபடுத்தும் நோக்கில் அவற்றுக்கு இலக்கமிட்டு தகவல் தளமொன்றுக்கு உட்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரக்கயத்தின் தாவர மாதிரிகள், நூலகச் சேகரிப்பு மற்றும் ஏனைய சேகரிப்புக்களை பேணிப்பாதுகாக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

## 5.4 தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ.மில். 40
செலவு ரூ.மில். 39.8

சிறு மற்றும் மத்திய அளவிலான பூ வளர்ப்போரை பலப்படுத்துவதற்கான பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பூச்செடியியல் அபிவிருத்தி நோக்கில் இலங்கை முழுதும் பூவளர்ப்போர் சங்கங்களின் எண்ணிக்கை 155 ஆக அதிகரிக்கப்பட்டு இவ்வ்வருடம் புதிதாக 19 சங்கங்கள் அமைக்கப்பட்டன. அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் திசு உருவாக்கம் பற்றி 11,901 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பூ வளர்ப்பாளர்களது தொழில் நுட்ப மற்றும் ஏனைய தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 08 செயலமர்வுகள் நடாத்தப்பட்டு 452 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.





**பூ வளர்ப்போருக்கான கள ஆலோசனை**

பூ வளர்ப்பாளர்களது உற்பத்திகளை விற்பனை செய்ய வசதி செய்து கொடுக்கும் வகையில் சிறிய கண்காட்சிகள் 154ம் மாவட்ட மட்ட பெரிய கண்காட்சிகள் 15ம் நடாத்தப்பட்டன. 1,345 நாற்று மேடைகள் தரிசிக்கபப்ட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

"Catalogue on Anthurium Hybrids" என்ற பெயரில் அந்தூரியம் வளர்ப்பின் புதிய கலப்பினங்களின் பெயர்ப் பட்டியலொன்று பிரசுரிக்கப்பட்டதோடு அந்தூரியம் மற்றும் ஒக்கிட் வளர்ப்புக் குறித்த கையேடுகளது தகவல்கள் புதுப்பிக்கப்பட்டு மீள் பிரசுரம் செய்யபப்ட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான ஓக்கிட் மற்றும் ஜெர்பரா தாய்த் தாவரங்கள் சகாய விலைக்கு வழங்கப்பட்டு புதிய தாவர வகைகள் பூ வளர்ப்போரிடை அறிமுகப்படுத்தப்பட்டன.

பூ வளர்ப்போருக்குப் பகிர்ந்தளிக்கவென அல்ட்ரா வயலட் பாதுகாப்புச் செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் நிழல் வலைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு, பகிர்ந்தளிக்கும் பணிகள் திட்டமிடப்படுகின்றன.



பூ வளர்ப்போருக்கான கருத்தரங்கு

நாட்டின் பூச்செடியியல் துறையை மேம்படுத்தவும் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் பல ஆய்வுகள் செய்யப்பட்டன.

களத்திலும் இரசாயன கூடத்திலும் ஓக்கிட் மற்றும் அந்தூரியம் கலப்பினங்கள் சில உருவாக்கப்பட்டன.

அனைத்துப் பூங்காக்களினதும் பூச்செடியியல் அலகுகளது தாவர நாற்று மேடைகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு அவற்றை மேம்படுத்துவதற்கான வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ஹக்கல, கம்பஹா பூங்காக்களது தாவர இல்லங்கள், கண்ணாடி இல்லங்கள் புனரமைக்கப்பட்டன. அத்தோடு பேராதனை பூங்காவின் ஓக்கிட் கண்காட்சியகம் மற்றும் ஓக்கிட் நாற்று மேடை ஆகியவற்றின் கூரைகளும் புனரமைக்கப்பட்டன.

## 5.5 கல்வி மற்றும் பயிற்சி

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: மூலதன ஒதுக்கிலிருந்து ரூ.மில். 0.3

தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து : ரூ.மில். 1.1

செலவு : ரூ.மில். 1.27



மூன்று மாத சான்றிதழ் கற்கை மாணவர்களுக்கான பயிற்சியின் போது

பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இளைஞர்கள் 55 பேர்நவீன பூச்செடிச் செய்கை முறைமைகள் மற்றும் நில அலங்கார முறைமைகள் பற்றி மூன்று மாத சான்றிதழ் பாடநெறியின் ஊடு பயிற்றுவிக்கப்பட்டனர். நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- level 4) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 15 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டனர். ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், தாவர சத்திர சிகிச்சைகள், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 2,560 விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

## 5.6 அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: மூலதன ஒதுக்கிலிருந்து ரூ.மில். 7.5

தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து : ரூ.மில். 32.3

செலவு : ரூ.மில். 33.92

தாவரப் பேணுகையை இலக்காகக் கொண்டு மக்களுக்கு பார்வையிடும் வசதியுடனான நிழல் தாவரங்கள் மற்றும் அரிய தாவர வகைகளை உள்ளடக்கிய தாவர இல்லமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.



**பூங்காவின் அழகிய தோற்றம்**

பூங்காவின் தென் பகுதியை அபிவிருத்தி செய்து ஆற்றை அண்டி பார்வையிடும் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

பூங்காவின் உள்ளக வீதிகள், வாடிகான்கள் என்பன மேம்படுத்தப்பட்டதோகட்டிடங்களும் புனரமைக்கப்பட்டன. உத்தியோகபூர்வ இல்லங்களும் பழுதுபார்க்கப்பட்டன.

மரச்சேகரிப்புப் பகுதியிலுள்ள கழிவறைத் தொகுதி திருத்தியமைக்கப்பட்டு அங்குள்ள உணவருந்தும் மண்டபமும் நவீனமயப்படுத்தப்பட்டன. பூங்காவின் சுற்றுலா விடுதி நவீனமயப்படுத்தப்பட்டதோடு, விற்பனை நிலையத்தின் கூரையும் திருத்தியமைக்கப்பட்டது.



**மரச்சேகரிப்புப் பகுதியிலுள்ள கழிவறை திருத்தியமைக்கப்படல்**

பிரதான நுழைவாயிலால் பார்வையாளர்கள் உள் நுழையும் போது ஏற்படும் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கண்ணொருவ பகுதியில் அமைந்துள்ள நுழைவுச்சீட்டுக் கருமபீடத்தைத் திறக்கும் வகையில் அது திருத்தியமைக்கப்பட்டது. 2017ம் ஆண்டில் அது திறக்கப்படவுள்ளது.

பிரதான பூங்காவின் அங்கங்களை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

## 5.7 கம்பஹா தாவரவியல் பூங்கா

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: மூலதன ஒதுக்கிலிருந்து ரூ.மில். 23.4<br>தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து : ரூ.மில். 5.5<br>செலவு : ரூ.மில். 28.05 |



**தோணித்துறை புனரமைக்கப்பட்ட பின்னர்**

பூங்காவின் வெளித்தோற்றத்தை மேம்படுத்தவென கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், தாவர இல்லங்கள், வசந்த இல்லங்கள், சுற்று மதில், நிழல் இல்லம், தோணித்துறை ஆகியன புனரமைக்கப்பட்டதோடு புதிதாக 02 தோணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. வாகனத் தரிப்பிடத்தை அண்டிய பகுதியை இன்டர்லொக் இட்டு மேம்படுத்தும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

மைதானத்தை அண்டி புதிய கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருவதோடு நலன்புரி உணவகமொன்று நிர்மாணிக்கப்பட்டது. புதிதாக வசந்த இல்லமொன்று அமைக்கப்பட்டதோடு புதிதாக மேலும் ஒரு உத்தியோகபூர்வ இல்லத்தை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூங்காவை அண்டி ஓடும் அத்தனகலு ஓயாவின் கரையில் 40 அடி வரையான பகுதியை அபிவிருத்தி செய்தற்காக காணி நிறைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிறுவனத்துக்கு டெண்டர் மூலம் வழங்கப்பட்டு அப்பணிகள் நடைபெறுகின்றன.

பூங்காவை உயர் மட்டத்திற்கு உயர்த்தும் வகையில் நில அலங்காரப் பணிகளும் ஏனைய நடத்துகைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பிரதான பூங்காவின் அங்கங்களை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

## 5.8 ஹக்கல தாவரவியல் பூங்கா

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: மூலதன ஒதுக்கிலிருந்து ரூ.மில். 2.85<br>தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து: ரூ.மில். 8.83<br>செலவு : ரூ.மில். 9.71 |



**மூலிகைப் பூங்காவின் காணி அபிவிருத்தி**

பூங்காவின் வெளித்தோற்றத்தை மேம்படுத்தவென கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், தாவர இல்லங்கள், வசந்த இல்லங்கள், சுற்றுலா விடுதி ஆகியன புனரமைக்கப்பட்டன.

அலுவலகக் கட்டிட விஸ்தரிப்புக்கான டெண்டர் கையளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே புதிய நுழைவாயில் கட்டிடத் தொகுதியொன்றை அமைப்பதற்கான டெண்டரும் கையளிக்கப்பட்டுள்ளது. பூங்காவை உயர் மட்டத்திற்கு உயர்த்தும் வகையில் நில அலங்காரப் பணிகளும் ஏனைய நடத்துகைகளும் மேற்கொள்ளப்பட்டன.


பிரதான பூங்காவின் அங்கங்களை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

## 5.9. கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தி

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: ரூ. மில்.12.5 |
| செலவு : ரூ.மில். 12.34 |

பூங்காவின் வெளித்தோற்றத்தை மேம்படுத்தவென கட்டிடங்கள் மற்றும் ஏனைய அங்கங்கள் நன்கு பேணப்பட்டன.

2014ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கேட்போர் கூட நிர்மாணத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான டெண்டர் கையளிக்கப்பட்டுள்ளது.



**மூலிகைப் பூங்காவின் அழகிய தோற்றம்**

பிரதேசத்தில் பூச்செடிச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்கில் அந்தூரியம் மற்றும் ஓக்கிட் வளர்ப்புப் பிரிவுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, 25,000துக்கும் அதிகமான கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. தாவரச் சேகரிப்பை மேம்படுத்தும் வகையில் அரத்தை(*Alpinia calcarata*), வெண் சந்தணம்(*Santalum album*), நியங்களா (*Gloriosa*) ஆகிய தாவரங்கள் நடப்பட்டன. அரிய வகை மூலிகைகள் 40 புதிதாக பூங்காவில் சேர்க்கப்பட்டன.

பிரதான பூங்காவின் அங்கங்களை சிறப்பாகப் பேணும் வகையில் புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு ஏற்கனவே இருந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

### 5.10. மீகல்லாவ பசுமை இல்லப் பயிற்சி நிலையம்

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு: ரூ. மில். 7 |
| செலவு : ரூ.மில். 6.99 |

04ம் இலக்க கள அலுவலகக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளுக்கான டெண்டர் வடமேல் மாகாண பொறியியலாளர் அலுவலகத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பயிற்சி நிலையக் கட்டிடப் பிரதேசத்தை அழகுற அமைக்கும் பொருட்டு நில அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தூரியம் மற்றும் ஓக்கிட் தாவர நாற்று மேடைகளில் கன்றுகள் நடப்பட்டன

## 6. ஏனைய அலகுகளின் முகாமை

### 6.1. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ இல்லங்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகள், மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு அலரி மாளிகை மற்றும் நுவரெலியா வாசஸ்தலம் ஆகியவற்றின் பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

### 6.2 அனுராதபுர புனித வெள்ளரச மரம்

அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் நடவடிக்கைகள் இவ்வருடமும் முன்னெடுக் கப்பட்டன. அதன் பாதுகாப்புக்காக 31 அரச மரக்கன்றுகள் நடப்பட்டன.



**புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல்**

## 6.3. பொது நலவாய போர் சமாதிகள் அலகு

கண்டி, ஜாவத்த, பொரல்ல, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது நலவாய போர் சமாதிகள் சிறந்த முறையில் பேணப்பட்டன.



**ஜாவத்தை பொது நலவாய போர் சமாதி**

## 6.4. தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்யப்படும். நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்களாவன :

- இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிபிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
- தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
- தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
- தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகைதருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத்தேவையான எந்தவொரு அவசர நிர்மாணாப் பணியையும்பொறுப்பேற்றல்.
- தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும்செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

இந்நிதியத்தின் நிதி உதவியின் கீழ் 2015ம் ஆண்டில் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பூங்காக்களின் அழகு மேலாகப் பேணப்பட்டன.

2015ம் ஆண்டில் இந்நிதியத்தின் வருடாந்த மூலதன ஒதுக்கு 100 மில்லியன் ரூபாய்களாகும். பூங்காக்களின் அபிவிருத்திக்காக அதில் 88.6 (89%) மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது.

## 7. 2015 ம் ஆண்டிலான உள்ளக இடமாற்றம், சம்பள உயர்வு, ஏனைய பணிகள்

### 7.1 பணியில் இணைத்துக்கொள்ளப்பட்டோர் - வர்த்தமானி அறிவித்தல் மூலம்

| பதவி | நிலவிய வெற்றிடங்கள் | கிடைத்த விண்ணப்பங்கள் | இணைத்துக்கொள்ளப்பட்டோர் |
|---|---|---|---|
| பூங்கா வேலை மேற்பார்வையாளர் | 10 | 675 | 08 |
| சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 02 | 225 | 02 |
| உதவி சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 04 | 130 | * |
| லொறி சுத்திகரிப்பாளர் | 02 | 19 | * |
| மேசன் | 02 | 03 | * |
| ஒட்டுனர் | 03 | 17 | 02 |
| மோட்டார் தொழில் நுட்பவியலாளர் | 01 | 28 | 01 |
| மின் தொழில் நுட்பவியலாளர் | 02 | 77 | 02 |
| தச்சன் | 04 | 18 | 03 |
| லேபல் வரைஞர் | 02 | 25 | 03 |
| **மொத்தம்** | **32** | **1217** | **21** |

* 2016 ம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

### 7.2. 2015ம் ஆண்டில் ஓய்வு பெற்றவர்கள்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பனிப்பாளர் நாயகம் | 01 |
| விவசாய ஆலோசகர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| தொழிலாளர் | 04 |
| **மொத்தம்** | **08** |

### 7.3. 2015ம் ஆண்டில் இடமாற்றம் பெற்றவர்கள்

| பதவி | திணைக்களத்திலிருந்து வெளியில் சென்றவர்கள் | திணைக்களத்துக்கு வந்தோர் |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 02 | 05 |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 05 |
| சாரதி | 01 | 02 |
| **மொத்தம்** | **05** | **12** |

## 8. பணியாளர் பயிற்சியும் இயலுமை விருத்தியும்

### 8.1. பணியாளர்களுக்கான திணைக்களப் பயிற்சி நிகழ்ச்சிகள்

| இலக்கம் | நிகழ்ச்சி | திகதி | இலக்குக் குழு |
|---|---|---|---|
| 1. | 2015 ம் ஆண்டின் PL-2 புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி | 2015.05.21/ 22 | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர், மேசன், மின் தொழில் நுட்பவியலாளர், லேபல் வரைஞர், மோட்டார் தொழில் நுட்பவியலாளர், ஒட்டுனர், தச்சன் |
| 2. | ஒழுக்காற்று சட்டக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் 104 பரிசோதனை | 2015.06.11/12 | அலகுத் தலைவர்கள், பதவி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலகப் பணியாளர்களும் |
| 3. | தேசிய போதை வஸ்து எதிர்ப்பு வாரத்தை முன்னிட்ட நிகழ்ச்சி | 2015.07.22 | அனைத்துப் பணியாளர்களும் |
| 4. | வேலை மேற்பார்வையாளர்களுக்கான செயலமர்வு | 2015.12.07/08 | வேலை மேற்பார்வையாளர்கள் |
| 5. | பணியாளர் பயிற்சி நிகழச்சி | 2015.12. 21 | அனைத்துப் பணியாளர்களும் |

### 8.2. வெளி நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட பயிற்சிகள்

| இலக்கம் | நிகழ்ச்சி | திகதி | பங்கு பற்றியோர் எண்ணிக்கை | சேவை வகை | இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | போக்குவரத்து முகாமை | 2015.01.30 | 01 | | முகாமைத்துவ உதவியாளர் |
| 2. | உள்ளகக் கணக்காய்வு | 2015.04.23/24 | 01 | | அபிவிருத்தி அலுவலர் |
| 3. | நட்டம், பழுது, பதிவு நீக்கல் | 2015.05.11/12 | 01 | | அபிவிருத்தி அலுவலர் |
| 4. | நேர் உளப்பாங்கு, திறன் விருத்தி | 2015.05.29 | 01 | | முகாமைத்துவ உதவியாளர் |
| 5. | கணக்கு லிகிதரின் கடமைகளும் பொறுப்புக்களும் | 2015.09.28/29 | 04 | | முகாமைத்துவ உதவியாளர் , அபிவிருத்தி அலுவலர் |
| 6. | அரச துறையில் கணக்காய்வுப் பிரச்சினைகளைக் குறைத்தல் | 2015.10.01/02 | 03 | | முகாமைத்துவ உதவியாளர் , அபிவிருத்தி அலுவலர் |
| 7. | நேர் உளப்பாங்கு, சுய ஊக்கம் | 2015.10.06 | 01 | | முகாமைத்துவ உதவியாளர் |
| 8. | சேவையில் இணைத்துக்கொள்ளல் ஒழுங்கு | | 01 | | முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | கேள்விப்பத்திரத் திட்டமிடல் ஏற்பாடுகள் | 2015.10.13 | 03 | | முகாமைத்துவ உதவியாளர் , அபிவிருத்தி அலுவலர் |

## 9. 2016 ம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்

| செயற்திட்டத்தின் பெயர் | தேவையான ஒதுக்கீடு (மில்லியன் ரூபாக்களில்) | |
|---|---|---|
| | கூட்டு நிதியத்திலிருந்து | தாவரவியல் பூங்காக்கள் நிதியத்திலிருந்து |
| **தற்போதுள்ள தாவரவியல் பூங்காக்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின் முகாமை** | | |
| **மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா** | | |
| கள்ளித் தாவர இல்லம், தாவர இல்லம், பணியாளர் வசதிகள் கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல் | 15 | 0 |
| பூச்செடியியல் ஆய்வுகூட நிர்மாணம் | 8 | 0 |
| உள்ளக வீதி அபிவிருத்தி | 5 | 0 |
| கூடுதல் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் புதிய நுழைவாயில் ஒன்றை அமைத்தல் | 8 | 0 |
| உத்தியோகபூர்வ இல்லங்கள் 02 ஐ அமைத்தல் | 11 | 0 |
| உணவகமொன்றை நிர்மாணித்தல் | 5 | 0 |
| பாதுகாப்பு வேலி நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல் | 5 | 0 |
| கட்டிடப் புனரமைப்பு | 4 | 0 |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | 1 | 0 |
| இயந்திரம், உபகரணக் கொள்வனவு | 21.5 | 0 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை | 10 | 0 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 2 | 0 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 3 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **98.5** | **0.00** |
| **இலுக்கோவிட ஈர வலய தாவரவியல் பூங்கா** | | |
| பார்வையிடு தளத்தின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல் | 1 | 0 |
| பொன்சாய் இல்ல நிர்மாணம் | 5 | 0 |
| வசந்த இல்லம் 02 நிர்மாணித்தல் | 2 | 0 |
| குடி நீர் வசதி ஏற்படுத்தல் | 2 | 0 |
| கட்டிடப் புனரமைப்பு | 0.85 | 0 |
| புதிய உபகரணக் கொள்வனவு | 1.3 | 0 |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | 0.3 | 0 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரக்கயமொன்றை அமைத்தல் | 2 | 0 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 1 | 0 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 1 | 0 |
| உணவகமொன்றை நிர்மாணித்தல் | 2.55 | 0 |
| தாவர விற்பனைக்கூடமொன்றை நிர்மாணித்தல் | 2 | 0 |
| பாதுகாப்பு வேலி நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல் | 2 | 0 |

| | | |
|---|---|---|
| உள்ளக வீதி அபிவிருத்தி | 2 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **25** | **0.00** |
| **கம்பஹா தாவரவியல் பூங்கா** | | |
| ஓக்கிட் இல்ல நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல், அதில் பொன்சாய் பிரிவொன்றை அமைத்தல் | 0 | 9 |
| கட்டிடப் புனரமைப்பு | 0.5 | 0 |
| புதிய உபகரணக் கொள்வனவு | 1 | 0 |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | 0.3 | 0 |
| புதிய கழிவறைகள் 02 நிர்மாணித்தல் | 0 | 2 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை | 1 | 0 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 1 | 0 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 1 | 0 |
| உள்ளக வீதி அபிவிருத்தி | 2 | 0 |
| உத்தியோகபூர்வ இல்லங்கள் 02 நிர்மாணித்தல் | 6 | 0 |
| குடி நீர் வசதி ஏற்படுத்தல், இருக்கைகள் அமைத்தல் | 0.5 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **13.3** | **11** |
| **கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா அபிவிருத்தி** | | |
| கட்டிடப் புனரமைப்பு | 1 | 0 |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணக் கொள்வனவு | 1.4 | 0 |
| மூலிகைத் தாவரங்கள் பற்றிய பிரசுர வெளியீடு | 0 | 0.5 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை | 2 | 0 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 0 | 1 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 0.6 | 0 |
| வசந்த இல்லங்கள் 02 நிர்மாணித்தல் (40'*30') | 0 | 2 |
| குடி நீர் வசதி ஏற்படுத்தல் | 2 | 0 |
| தேசிய மருத்துவப் பெறுமானத்துடனான உணவுகளைக் கொண்ட உணவகமொன்றை அமைத்தல் | 4 | 0 |
| தாவரக்கய அபிவிருத்தி | 0.2 | 0 |
| காணி அபிவிருத்தி, மூலிகைப் பயிர்ச்செய்கை விரிவாக்கம் | 2 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **13.2** | **3.5** |
| **ஹக்கல தாவரவியல் பூங்கா** | | |
| நுழைவுப் பகுதியை மீளமைத்தல், அலுவலகப் பிரதேசத்தை நவீனமயப்படுத்தல் | 0 | 15 |
| உணவகமொன்றை அமைத்தல் | 0 | 5 |
| கழிவறைகளுடனான வசந்த இல்லங்கள் 02 நிர்மாணித்தல் (40'*30') | 1.5 | 2.5 |
| கட்டிடம், உத்தியோகபூர்வ இல்லம், வாகனம், உபகரணங்களைத் திருத்துதல் | 1.5 | 0 |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணக் கொள்வனவு | 0.6 | 0 |
| உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணம் | 0 | 4 |

| | | |
|---|---|---|
| உள்ளக வீதி அபிவிருத்தி | 0 | 2.5 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை | 0 | 1 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 0 | 2 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 0 | 1 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **3.6** | **33** |
| **பேராதனை அரசதாவரவியல் பூங்கா** | | |
| தாவர இல்ல நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல், அதில் பொன்சாய் பிரிவொன்றை அமைத்தல் | 0 | 3 |
| தெற்காக ஆற்றங்கரையில் பார்வையிடும் தளமொன்றை அமைத்தல் | 0 | 2 |
| குடி நீர் வசதி ஏற்படுத்தல் | 0 | 1 |
| சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் உணவகத்தைப் புனரமைத்தல் - முதலாம் கட்டம் | 0 | 2 |
| சுற்றுலா விடுதியை மீளமைத்தல் - முதலாம் கட்டம் | 1 | 0 |
| கட்டிடம், உத்தியோகபூர்வ இல்லம், கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் திருத்தம் | 2.6 | 0 |
| புதிய கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 0.4 | 0 |
| உள்ளக வீதி அபிவிருத்தி | 0 | 7 |
| உத்தியோகபூர்வ இல்லமொன்று நிர்மாணித்தல் | 0 | 05 |
| மர நடுகைச் செயற்திட்டம், தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி, தாவர வெளிவாரிப் பேணுகை | 0 | 2 |
| சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியுடனான பயணம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள், தகவல் கூடமொன்றை அமைத்தல் | 0 | 1 |
| அனைத்துத் தாவரங்களுக்கும் லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 0 | 1 |
| பணியாளர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி | 0 | 5 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **4** | **29** |
| **கல்வி மற்றும் பயிற்சி நிலையம்** | | |
| பூமி அலங்கார முறைமைகள் பற்றிய மூன்று மாத சான்றிதழ் கற்கையை நடாத்துதல் | 0 | 0.5 |
| பூமி அலங்கார அபிவிருத்தி உதவியாளர் - ஒரு வருடப் பாட நெறிக்கு (NVQ- level 4) மாணவர்களை இணைத்துக்கொள்ளல் | 0 | 0.5 |
| பயிற்சி நிகழ்ச்சிகள் | 0.2 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **0.2** | 1 |
| **பூச்செடிச்செய்கை அபிவிருத்தி** | | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 0 | 6 |
| பூச்செடியியல் பற்றிய பிரசுரங்கள், பத்திரிகைகள் வெளியிடல் | 0 | 1 |
| பூ வளர்ப்போரது இயலுமை விருத்திக்கான பயிற்சிகள், கண்காட்சிகள் | 0 | 1 |
| வளர்ப்பு ஊடகங்களது தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தாய்த் தாவரங்களைக் கொள்வனவு செய்தல் | 0 | 3 |
| கூட்டங்களுக்கு சமூகமளித்தல் மற்றும் நாற்று மேடை முகாமைக்கான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டான பயணங்கள் | 0 | 5 |
| பொருட்கள் வழங்கி பூ வளர்ப்போருக்கு உதவல் | 0 | 6 |

| | | |
|---|---|---|
| நாற்று மேடைகளையும் பயிரிடு பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்தல் | 0 | 3 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **0.00** | 25 |
| **தேசிய தாவரக்கயம்** | | |
| ஆய்வுகள், தாவரக் கண்டாய்தல்கள் | 0 | 1 |
| தாவரப் பேணுகை, எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள், உயிரினப் பல்வகைமை, உயிரினப் பல்வகைமைப் பேணுகை ஆகியன பற்றிய் பிரசுரங்களை வெளியிடல் | 0 | 1 |
| தேசிய தாவரக்கயத்தை நவீனமயப்படுத்தல் | 0 | 4 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **0.00** | **6** |
| **மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலையம்** | | |
| பழைய கட்டிடப் புனரமைப்பு | 3 | 0 |
| புதிய தளபாடக் கொள்வனவு | 1 | 0 |
| நாற்று மேடைகள் மற்றும் பயிரிடு பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் | 1 | 0 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **5** | **0.00** |
| **நாரஹஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகம்** | | |
| பூச்செடியியல், தாவரங்கள் பற்றிய தகவல்களை கொழும்புப் பிரதேச மக்களுக்கு வழங்கும் தகவல் நிலையமாக அபிவிருத்தி செய்தல், அது தொடர்பிலான தகவல்களை வழங்கும் தொலைபேசி சேவையொன்றை ஏற்படுத்தல் | 0 | 1.5 |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **0.00** | **1.5** |
| டெல்ப் தீவில் தாவரவியல் விஞ்ஞான ஆய்வு மற்றும் கற்கைகளை மேற்கொள்ளல் | **0** | **10** |
| **பிரதான பணிமனை** | | |
| பிரதான பணிமனையின் வசதிகளை மேம்படுத்தல் | **0** | **5** |
| **மொத்த ஒதுக்கீடு** | **162.8** | **125** |
| புதிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | | |
| புனிதப் பாத வனப் பிரதேசத்தில் தாவரவியல் பூங்காவொன்றை அமைத்தல் | 20 | 0 |
| வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூச்செடியியல் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 15 | 0 |
| வட மாகாணத்தில் தாவரவியல் பூங்காவொன்றை அமைத்தல் | 10 | 0 |
| அரச தாவரவியல் பூங்காவில் விடுதியொன்றை அமைத்தல் | 0 | 15 |
| அரச தாவரவியல் பூங்காவுக்கு புதிய வாகனத் தரிப்பிடமொன்றை அமைத்தல் | 50 | 0 |
| அரச தாவரவியல் பூங்காவில் அமைந்துள்ள லக்சல விரற்பனைக்கூடத்தை, தகவல் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்காக சுவீகரித்தல் | 0 | 2 |
| தேசிய தாவரக்கயத்துக்கு புதிய பிரிவொன்றை இணைத்தல் | 0 | 15 |
| டெல்ப் தீவில் தாவரவியல் விஞ்ஞான ஆய்வு மற்றும் கற்கைகளை மேற்கொள்ளல் | 0 | 10 |
| திரு. அல்விஸ் அவர்களது தாவரவியல் வரைபடங்களைக் கொண்டு பிரசுரமொன்றை வெளியிடல் | 0 | 4 |
| அரச தாவரவியல் பூங்காவின் தொங்கு பாலத்தை திருத்தியமைத்தல் | 0 | 10 |
| புதிய வேலைத் திட்டங்களுக்கான முழுச் செலவினம் | **95** | **56** |